463

உ

குகமயம்.

ஓம் தத்ஸத் பரஸ்பரம்.

சற்குருமணிதுணே.

ஸ்ரீமத் புனு கணபதியோகீஸ்வரர்கள்

பிரதம சிஷ்யன்

T. R. வெங்கடேஸ்வரகர்த்தா

இயற்றிய

ஜன்மார்க்க

கீதாமிர்த சாரம்.

இஃது

இராஜபாளையம் சந்தைபஜார் ஜவுளி வியாபாரம்

ஆ. குருசாமிமூப்பனர், வ. கருப்பழகுமூப்பனர்

இவர்களால்

இராஜபாளையம்

ஜெயராம் பிரஸில், அச்சிடப்பட்டது.

1929.

முதலாவது பதிப்பு.

விலை அணு 8

17 JAN 30

O-,1mvx,5
M29
183541

OFFICE OF THE ... 17 JAN 1939 ... MADRAS

உ

குகமயம்.

சித்திவிநாயக பூஜிதம்.

அறுசீரடி விருத்தம்.

நிலையிந்து நேர்நுதற் சுழி முனையின் வாசியே நேர்த்தி யோகம்
தலை விந்தையாம் புனு தேச கணபதி யோகி சாது மீது
கலை மந்தகாச முத்தமிழ் பண்ணுரைத் திடக் கமழ் சஞ்சீவி
மலைமுந்த லாலயங் குடிகொண்ட முன்னவன் மலர்த்தாட் காப்பு.

இராகம்—பியாக்கு தாளம்—ஆதி.

மான்பாரேன்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

வரம்பா குண நிதி
ஆரம்பா கணபதி.

ஈசாங் கயற்கணி பாலா சங்கின
பாசாங் குஜதர தூலா லிங்கன (வ)

பாரம் பரையாகப் பனி மலர் தூற்றி
பாத நமஸ்தே பண்டமிழ் சாற்றி
தீரம் பரவிய புத் திரனைக் காப் பாற்றி
ஜெயந் தருந் த்ரியம்பக தேவனே போற்றி (வ)

டாம்பீக கஜமுகா டம்பா ஞர்ப்பா
டங்கொ ளவனுயிர்க் கட லும்புரி நேர்பா
ஆம்பல் வசன மொழி அடியவர் சார்பா
அணியும் வெள் ளெரிக்கலை யாரத்தின் மார்பா (வ)

சஞ்சீவி மலை முந்தல் தலங் கொண்ட தேவா
சகாய ப்ரணமத மகானு பாவா
செஞ் சேவலாளிக்கு முன் ஜெனித்தோனே காவா
திறங் கருணை மூஷிக துரங்கமேல் வாவா (எ)

சரஸ்வதி நடன சபா ஜெய மாக்ஷி
சகல ப்ரகாச ஞான சாஸ்திர தீக்ஷி
பரஸ்பர திருவுளப் பாக்ய கண் காக்ஷி
பாலன் வெங்கடேஸ்வரன் பணிவது சாக்ஷி (எ)

இராகம்—சங்கராபரணம் தாளம்—ரூபகம்.

நூதன சந்த மகுட சாஹித்யம்.

கண்ணிகள்.

கமழேரிய கடம்ப வடங் கொள் முருகா
காவடிப் பால் பொங்க வேல் மயிலுக் கரோகரா மகா (க)

கரதல கடக கழுகுமலை (க)
கண்டு கொண்ட நான் தொண்ட ஞகியுறும்
வெண்டு மண்டா கோன் தெண்ட யோக நறுங் (க)
கருணை பொழிய வலவன் மருக
கருண மெதிரில் வருக வருக (க)

ஷை

தமிழாகர சாகரமாகிய
சண்முக ஞான ஜன் மார்க்கா
தண்ட தாசர் பூஜை கொண் டாடும் பழனி
தண்ட பாணி ஜீவ தீர்க்கா
தட்புட லசுரர்கள் தலைகளைத் தரித்தாய்
சரண மகிமை விரித்தாய்.

சகல வரிசை

தாங்கி யங்கு　　　　பாங்கி லங்கு
சந்தன மேரு　　　　செந்திலி லூரு
சக்ர வர்த்தியே　　　　வுக்ர விர்த்தியே
சடாக்ஷ ரக　　　　கடாக்ஷ குக
சாஸ்வத ஸ்ரீ வெங்கடேஸ்வர மாதுங்கக் (க)

இராகம்—இந்துஸ்தான் தோடி　　　　தாளம்—ஆதி

பரப்ரம வேலா—என்ற மெட்டு.

சந்தக் கண்ணிகள்.

கணபதி யோகி　　　　காக்ஷியாகி
குணபர மார்த்த　　　　க்ராகி
குருவி னருட் ப்ர　　　　வாகி
பணநிலை வாசி யோகம்
பண் பார்ந்திடும்　　　　விவேகி
பாத நீத போத நாத (க)

பால சுந்தரா மனோ　　　　சேதனம்
பார ஞான கிர்தார்த்த　　　　சாதனம்
ஞால மந்திரா கார　　　　போதனம்
ஞாபக ப்ரமங் த்யான　　　　மாதனம்
நடங் கொள் ப்ரபல நன்குறு　　　　சம்பனு
துடங்கும் ப்ரசுர துங்க மிகும்　　　　புனு (க)

தொகையறு

சகாஜி மகாராஜா மெய்த் தவ புத்ர சந்
தான ரஞ்சித மகானே
சதுரகிரி சுந்தர மகா லிங்கர் தலமதில்
தளகர்த்த ஞன கோனே.

பாட்டு

சரமணி திகழ் விஸ்வ ப்ரமகுல திலக
திறமொழியு வெங்கடேஸ் வர னனு
தினம் பணியுங் (க)

இராகம்—சிம்மேந்த்ர மத்திபம் தாளம்—சாப்பு.

நீது சரணமுலே—என்றமெட்டு.

பல்லவி.

சாது கருணை புண கணபதி
சரத நன்மை குஜாலஸ் தபண ராஜாம்ச (சா)

அநுபல்லவி

பாது காப்பாடுத லுண்டாகுமே
பரவு கோதர் பார ராமே. (சா)

சரணம்

நாத ப்ரம்ம நிறைந்ததே—மந்த்ர
ஞானவழி யா ராய்ந்ததே
கீதப் ரீதி கெண்ய வானே—சங்
கிரக வெங்க டேஸ்வரன் விண்டேனே. (சா)

இராகம்—தோடி தாளம்—ரூபகம்.

தம்மேயே புகழ்ந் திச்சை பேசினும்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

நன்மையே கொண்ட நெஞ்ச மானதால்
ஞானியாகவே தோன்றினர்

ஜென்ம மானது சாபல்ய முற
தேக யோக வே னான்றினர்.

பாக்ய வாளர் ஜோண் டாட்டமாம் ராஜ
பாளைய மிசை வந்தனர்

வாக்ய போதனங் கேட்கவே சிஷ்ய
வர்க்கத்தால் மகிழ் தந்தனர்.

சித்த யோகப்ர சித்தனாகிய
செல்வ ரும் புனு கணபதி

அத்துவீத மகத்வ சோபித
ஆண்டி வேட சற் குணநிதி.

சுந்தர மகா லிங்கர் சன்னதி
ஜோதி ரூபப்ர காசியே

மந்திராகர வெங்க டேஸ்வரன்
மாக்ஷி கீத விஸ் வாசியே.

இராகம்—பிலஹரி தாளம்—ஆதி.

கனவிலும் நனவிலும்—என்ற மெட்டு.

சந்தப் பல்லவி.

குரு வுபதேசங் கேளு நன்மைக ளுண்டு
கூக பேரின்ப சிவ யோக நிலையி லாளு.

அநுபல்லவி.

மருவு மரிக் கொழுந்தை மல ரடியில் தெளித்து
மார்க்க வேதாந்தி பக்தி யேற்கப் பரிசளித்து (குரு)

சரணம்.

வாயைத் திறந் துழன்று மாயை வந்திடி லதை
மௌனத் த்டியினுலே கவனத்துட னடித்து
நாயை விரட்டி ஞற் போல் பேயை விரட்டி விட்டு
ஞானக் கடல் ததும்பும் கானக் களஞ்சியமாம்
நவரச விந்துநா தமகிமை குணநிதி
தவசருளும் புண விமரிசை கணபதி (குரு)

மாழை யிலகு ராஜ பாளைய மாநகரில்
மடந்தடம் பூஞ்சோலைகள் யிடந்திடஞ் செய்து கொண்டு
வாழையடி வாழையாய் காளை வாகனத் தீசன்
வழிமுக நாசி யூடு சுழிமுனை ப்ரம்ம நாட்டம்
வஞ்சியர்கள் மையலே யண் டிடாம லத்ரய
செஞ் சொல் மொழி செய்யவே யுண்டுவீர க்ஷத்ரிய (குரு)

சொன்ன தெல்லாம் விட்டுப் பின்ன லாடியே காய்த்த
சுரக்காயைப் பிடுங்காதே குரக் காட்டமாய் நெஞ்சமே
முன்னம் பத்ர கிரியார் சென்னபட் டினத் தாருக்கு
முதற்சீட ராக யிருந் ததைக் கண்டால் க்ஷேம லாபம்
முழங்கிய சங்கமே பிலஹரி ராகமது
வழங்கிய வெங்கிடேஸ்வர கீர்த்தியா லெமது (குரு)

இராகம்—கேதார கௌளம் தாளம்—ரூபகம்.

ராமநாமமே தெய்வீக—என்ற மெட்டு.

பல்லவி.

தேவ லாவண்ய தீக்ஷண்ய ஜீவ காருண்ய
சிவ குரு பானது (தே)

அநுபல்லவி.

ஆவலாய்ப் புஞ சுதேச அண்ணலே வண்ணமாய்
அடியவர் துதி புரி (தே)

சரணம்.

சிஷ்யர்களுக்கு வேதாந்தத்தைப் போதித்து
சிவ சின்ன ருத்ராக்ஷத் தவநிலை சாதித்து
வஸ்ய மெஸ்மரீசன் வாசியைச் சோதித்து
வந்தவா விந்தை சேர்
வரகுண தாருக (தே)

சதுரகிரி சுந்தர மகா லிங்கம்
சாதுவாக்கிக் கொண்ட சாரஸ்யத் தங்கம்
மதுரப் பதி னெண் பாஷை கற்ற துங்கம்
மண்டு சீர் கொண்டுதான்
மனமது குதுகல (தே)

மங்கள சற்குண மௌனங் கொண் டாடல்
மாதவ யோகி சமாதியுங் கூடல்
வெங்க டேஸ்வரன் விஞவிடைப் பாடல்
விண்டு நாம் தொண்டராய்
விதானைப் பணி செய (தே)

இராகம்—அடாணு தாளம்—ஆதி.

மித்தையென் றறிவாயே—என்ற மெட்டு.

பல்லவி.

சித்தனென் றுணர்வாயே
அகமே விபுஞ கணபதி (சித்)

அநுபல்லவி.

துத்யா மொழி வித்யா கரநற்
சுபத்தை யெல்லாம் வகித்த அருளுடைய (சித்)

சரணம்.

சீலத்தை வியக்கு மகத்துவமே
காலத் துறை கற்ற திருத்தவமே
மூலத் தமிழ் பக்தி யடுத்த
முதற் புராதன மதற்காகிய கன பிர (சித்)

பொற்பாத நமஸ்து திருக் கோவில்
கற்பூர கமழ்ச்சி தருப் பூவில்
பூஜித வெங்கடேஸ்வர நின் புகழ்
புகட்டு பண்பால் சுகட்டு மணி நமதொரு (சித்)

இராகம்—கமாஸ் தாளம்—ஆதி.

சேந்தேன் பொழிந்ததே—என்ற மெட்டு.

சந்தப் பல்லவி.

வேதாந்த சாரமே வேள் புனு ஸ்வாமியின் சொல் (வே)
விதிகண்டு மதிற் பதி கொண் டுயர்கிற (வே)
விக சிதம் சகலதும் விகிதமன (வே)
விரும்பும் புலன்க ளொருங்கு திரண்டு
விளங்கு பரா பர (வே)
விந்தே சேகர சிந்தே யாதா
செந்தே ஞகர வந்தே மாதர (வே)

அநுபல்லவி.

மாதாந்த மெஸ்ம ரீஸம் நாதாந்த காரமே (வே)

சரணம்.

பேதாதி பேத மெல்லாம் ப்ரம்மத்தின் ப்ர காசமே
பேரின்பமாம் பட்டினத் தார் சொல் விசு வாசமே
பாதாதி கேச ஜோதி பண்ணவர்கள் நேசமே
பாகி லுரை கணபதி யோகி நாம தேசமே

திக்குப்

பாலர்கள் தின முழங்குந் தீக்ஷி மணக்
காலமே சன்யாசி யான காக்ஷி இந்த
ஞால மெல்லாங் கை குவிக்கச் சாக்ஷி நல்ல
சீல குணந் தங்குதலே மாக்ஷி
சித்ரச் சுதியைக் கூட்டி ருத்ர வீணையை மீட்டி
வித்வத் தன்பு பாராட்டி தத்வப் பனுவ லாட்டி

சந்தோஷத்தோடு

சரி சொல் வெங்க டேஸ்வர சுமங்களா
சிறிய கங்கணு காத லங்களே

பாதிமதி நதி யென்ற திருப்புகழ்—வர்னமெட்டு.

ஓரடி ரஞ்சிதம்.

வாச மலர் மகள் ஆசை யொடு வளர்
வாகு பரவிய அடியார்கள்
வாழி மன மகிழ் காவி மணி துகில்
வானவர்கள் புகழ் புரி புனு.
தேச கணபதி யோகி ரமணிக
தேவ ரகசிய சுமகானே.
த்யான சமயம டாலய சுகுண
தீபமென வொளிர் கனவானே.

(வே)
18354

பாச வினையத	பார வழிதன
பார மடவியர்	மயல் மோக.
பாபம் விலகிட	ஞான நெறி புகு
பாடி தழுவிய	பரதேசி.
நேச குரு மொழி	போத மென வரு
நீத சிஷ்யர்கள்	வுபதேசா.
நீடு சதுரகி	ரீஸ்வர சரண
நேம விகசித	திரு நாளே.

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி.

வனஜாக்ஷி—என்ற மெட்டு.

கண்ணிகள்.

குரு மூர்த்தி	குணமணி யினர் பணி	(கு)
குல மகா க்ஷத்திரியக்	கொள்கையான சற்	(கு)
கோமளக் கடலி	லேமழைக் கருணை	
தாமகத்வ கெடி	நாம ரத்ன ஜெக	(கு)

ஷ

தரும சிந்தனையுள்ள	தனதகு	ணளர்	
சதுரகிரி சுந்தர	தாச்சுத	சீலர்	
திரு புனு தேசபக்த	சிவணகு	ஜாலர்	
சிஷிய போத	சிவப்ர மாத		
ரிஷி விநோத	ரெடிப வீத		(கு)
குமுண சகாஜி	தனுவ்ஷ் கோடியின்	பாலர்	
கொடி காவி வஸ்த்ர	தங்கக் கோபுர	லோலா	
தமுண வறி வுஜித	சதுர்மறை	நூலர்	
தகு விமான	தாளமான		
சகுணவான	சுர மெஞ்ஞான		(கு)

நாதமணி வளர்த்த ராஜ சன் யாசி
நடத்து ராஜபாளைய மடத்தில் ப்ரகாசி
கீத கிண்கிணி தொனி கெணி பர தேசி
கெங்கையா கரன் மங்கையா கரன்
திங்கள் தேசுரன் வெங்கடேஸ்வரன் (கு)

இராகம்—கதன குதுகூலம் தாளம்—ஆதி.

ரகுவம்ஸ சுதா—என்ற மெட்டு.

பல்லவி.

பஜனுர்ப்பிதா பகவாம்ச ஞானு
பஞ்ச பூத சேனு பதியோத்யானு(ப)

அநுபல்லவி.

நிஜ ரூபனே விஜயா மகானே
நிஷ்களா புனு தே சக் குளாங்கள் கோனே (ப)

சரணம்.

பக்தி மார்க்க மாகி பரப்ரம்ம யோகி
சக்தி நேர் சாத்மீகி சாந்தத்தால் விவேகி
முக்தி மோக்ஷமே மோதிடக் கண்டோமே
மூர்த்தி வெங்க டேஸ்வ ரார்த்தச் செய்யுள் நாமே
மோகனமா யுணர் மாகன நூதன
சாதனமே இகபர சுகமது பெற
முதுவர்கள் பரவச ரக்சிய சுழிமுனே
அது நிலை கணபதி குருமணி சிஷியர்கள் (ப)

இராகம்—பியாக் தாளம் ஏகம்.

கண்ணிகள்.

சித்தர் பிரா னென்றுமே இச் செகத்தினி லுதித்தாரே
பெரு மகத்வ ரஞ்சிதப் பேரே—புண
தேச ஸ்வாமி காவி வஸ்திர ஜெயக் கொடியது சீரே.

பக்தர் குழாங் கோவில் ராஜ பாளைய நகர் மேவி
நல்ல வேளை தனில் சஞ்சீவி—மலை
பக்க மேற்கி லன்ன சந்திரம் படைத்த கோபுர ஸ்தாவி

க்ஷணத்தி லொருவர் குணத்தை யறியும்
க்ஷத்திரியத் திருமேனி—ஜீவன்
முக்தர்க ளபிமானி—தட
சதுரகிரி சுந்தர மகாலிங்கர் ஸ்தலத்தில் ராஜதானி.

பணத் துரையாளர் மனத் தன்மை தெய்வ
பட்டமான யோகி—பரி
வட்டங் காவியாகி—துஜம்
பறக்க விண்ணவர் பிடிக்கதற்கு மேல் பறந்துகாட்டும் ப்ரவாகி.

ஞானக்கண் ரசவாத கட்டளை
நாத விந்து ப்ரபலந்தான்—ஜென்ம
சாதகமது நலந்தான்—இந்த
ஞாலத்தி லருளே லகிப்புறு ஞாபகக் குதுகலந்தான்.

பூனைத் தொனியும் பணிலத் தொனியும்
பொருந்திக் கமழு நெறியார்—பெண்கள்
பெருந் தீக் காமக்குறியார்—தாயின
பேருதிரத்தில் பிறந்ததன்றி வேறு தோஷ மறியார்.

ஆயத் துறைக்கு ஞாயத் துரையாய்
அவதரித்த பிரகாசி—பெருந்
தவ சுழிமுனை வாசி—நிலை
அகண்ட க்ரண ப்ரமாண்ட கொள்கை அமைத்து திருநீரு பூசி.

நேயத் தாண்டய ராயத் தோன்றலாய்
நினைத்தருள் சரபோகி—பூவில்
அனைத் துயிர்க் குயிராகி—யெங்கும்
நிறைந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரன் தமிழ் நிதனற் சொல்லனிக்ராகி.

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—அடதாளம் ஷாப்பு.

பாலாபிஷேகம்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

பாராபிமானப் பதாம்புயப் பாவையர்
பாற்காம ரகித படாடோபந் தான்
தாராள சீராள பாராளும் யோராள
சந்யாசக் கூட்டஞ் சதா தீபந்தான்.

தொகையறு.

வீராதி வீர வைராக்கிய சித்தார்த்த
மெஸ்மரிசங் கற்றோர்
தீராத நோய் தீர்ப்பர் விஷப் பார்வை யஷ்டமா
சித்தி பெற்றோர்.

சந்தப்பாட்டு.

விதுமுக சிஷியர்கள் விரிபுக ழேந்தி
பிதாவென யென வரு பெரிய வேதாந்தி
வேசி மகன் சொல் கொண் டாசிகூறுங் குகன்
பேசிய பால்ய சந்யாசி யானுர்.

தொகையரு.

சமய சஞ்சீவியாம் இந்தியாவில் புரு
சாமியின் பேர்
உமையவள் முதற் புதலவர் பெயரினைக் கணபதி
யோகி யென்பார்.

சந்தப்பாட்டு.

தவநிலை சுழிமுனை தழுவிய சாது
பவமது விலகிட பழமறை யோது
தாலங் கொண்டாடும், குரு லங்கிர் தாமிர்த
சாஸ்வத ஸ்ரீ வெங்கிடேஸ்வரன் சொல்.

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—யேகம்.

கண்ணிகள்.

விந்து ஞான விந்தையால் விவேகி—குண
விருத்தர் முனிவர் திருப்தி யடைய வேண்டிடும் சாத்மீகி
வேகமுறு தடாகி புரு கணபதி யோகி—நல்

புஜண்ட மாமுனி ப்ரசண்ட நெஞ்சக பூத—மகிழ்
பொரிக் கலங்கிடா நெறிக் கிணங்கிய
போதன ப்ரமாத புகழ் சதுரகிரீத—வகண்
ஜட பஞ்சநாத

சமுசிகாபுரத் தமுசமாகிய ரோட்டைக்—கொண்டு
தான தர்ம விநோதராஞ் சென்னை
மாநகர் சைதாப்பேட்டை
சாமி சமாதிக் கோட்டை—யெ
ணமிதுவெனுங் தேட்டை

தாயுமானவ ராய பட்டினத் தாரே—சொல்லும்
தகமை விருத்த மகிமை யறிய
தாண்டவப் பத நேரே—தற்
சமய சஞ்சீவி மேரே—கை
அமையு முக்தி யென்பாரே.

திண்டுக்கல் நகரண்டத் வீத சமாதி—பெற்ற
சீத வதன வோதஸ்வாமியின்
சிஷியரான ப்ரீதி—சிவ
தேஜஸான க்யாதி—வெங்கடேஸ்வரன்
சொல் நீதி.

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி.

கண்ணிகள்.

புஞ தேசத்து ஸ்வாமியைப் போல் மகான்களு முண்டோ
புண்ணியரே தேவ கண்ணியரே
ஞானனந்தக் கடலாம்
ஞாபகத்தின் மடலாம்
ஞாயாதி பதியென்று நயந்திடலாம்—நாமள்
வியந்திடலாம்.

அஷ்டாங்க யோக முற்றார்
அஷ்டாயிஸ் வரியம் பெற்றார்
திருஷ்டாந்தமே வேதாந்த திலக திவ்யம் கற்றார்
கணபதி யோகி யென்று கடாக்ஷம் பகர்ந்தா ரின்று
குணமணி காவி வஸ்திரம் கோலாகலந் தானன்று.

தேவராஜன் புகழ்வோர்
சின் மயமாய்த் திகழ்வோர்
நாவலன் வெங்கடேஸ்வரன்
நற்றமிழ்க் குள மகிழ்வோர்.

இராகம்—தோடி தாளம்—ரூபகம்.

சிவ யோகி ஸ்ரீமத் புஞ கணபதி

சந்த அநுபல்லவி.

தவநிலை நேர் ததம் ப்ரபல (த)
தங்கந் துங்கந் தங்கும் (த)
சாமி பூமி யதுபுகழ் (த)
சந்தான பந்தான மெஞ்ஞான (த)
தாயுமான சாமி மோன (த)
சமய பர சுழிமுனை பகுட (த)
தடையிலாத விடை விநோத
யிடையில் காவி யுடை யுலாவி (த)
ததும்பிடுமை புலன்களுமொ
ரொழுங்கு பட விளங்கிய மெய்த் (த)
சரணதா ரகசு பரம
கருணை தாரு மென விக்ரம (த)
தாபர சங்கத்தோடு தாளிணை தங்கத்தேடு
தாரணி வஞ்சத் தீடு தானற நெஞ்சத்தூடு (த)
சச்சிதானந்த மெஸ்மரீசக
வர்ச்சி காந்தப் பவர் செய் வாசக (த)
தாடலோடு பாடுவோர் தடம் பெருகு
கூடலாடி பீடு நாடி கிடந் துருகு (த)

சரணம்.

சதுரகிரி சுந்தர மகாலிங்கம்
தலதழ கர்த்த சந்யாச பைரங்கம்
மதுர வெங்கடேஸ்வரன் சொல் ப்ரசங்கம்
மகா சுகாஸ்
பதந் தொனிக்க நிதங் கெனிக்க
வதந்தி பெற்ற (சிவ)

இராகம்—பியாக் தாளம்—ஆதி.

கண்ணிகள்.

பொருள் மிகுந்திட்ட போது ஞானங்க ளேது
புறக்குங் குபேர னென்ற பேர் கிடையாது
அருளில்லார்க் கவ்வுலக மில்லை யென்ற தோது
அறிந்தார் நமது புனு கணபதி சாது.

அருமை பெருமையுள்ள மானிட பாக்யம்
அதற்குத் தகுந்த ஞாயம் செய்யா ரயோக்யம்
தருமன் பீமன் காண்டீபன் ஸகோதர சிலாக்யம்
தரு நகுல சாஸ்திர சகாதேவன் வாக்யம்.

ஜெக தூர்த்த லோபி யென்று சொல்வார் வித்வான்கள்
செய்கை செய்யாதவர்கள் யென்ன சீமான்கள்
பகதூர் போஜ காளிதாஸ் பாஷை செந்தேன்கள்
பக்தியது செய்தால் நல்லா யிருப்பான்கள்.

முகஸ்துதி பேசாதவர் க்ஷத்ரிய ஸ்வாமி
முழங்கும் வேதாந்த பாராயண டம்ப நாமி
சகஸ்த்திர நாமார்ச்சனை முருகனை நேமி
சரப வெங்கடேஸ்வரன் தமிழ் புகழ் பூமி.

இராகம்—மோகனம் அடதாளம்.

கருணை லபுனு கணபூ பதி ஸ்ரீமத் (க)
காமர் மங்கள மூல மந்திர
ஓமெனும் ப்ரண பால சுந்தர (க)
கமல சந்த்ர முகாரம்பப்
பமர கங்கணப் பேரின்பக் (க)

காதர் சிட்டா வற்ற நாதக் கட்டே பெற்ற (க)
கனக ரத்தினம் சோபனம் பெறவே—மிகுந்தருள்
தினகர க்ரண ஜோதி யன்புறவே—தகுந்திருக் (க)

அநுபல்லவி.

அருணோதயவா னந்தனே சொந்தனே
ஆதியானவன் தேட யேகிய
ஓத சாமியின் சீடராகிய
ஆசையற்ற ஜவ்வாது மேவியவா
க்ஷத்ரிய மக ராஜபட்டின மீதுலாவியவா
சித்திரத்தமிழ்
அங்க சேகர வெங்க டேஸ்வரன்
அருமை பெருமையில் தருமதுரை செயல் (க)

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி.

உமாதேவி சுசீலா—என்ற மெட்டு.

கண்ணிகள்.

புண தேசாதி பாக்யாதி பூம்ப்ரப லாக்ரண ஞானி
ஜனனுகூல தாராளா சாத்மிகத் தார்தழால் ஜீனி
சலாமென்றே குலாவின்றே
ஜால சமாதி ரசதாளி—நல்லோத
சாமி சீடாளி.

தொகையரு.

விஸ்வா மித்ரர் வதிஷ்டர் நாரதர் சுகர் போகர்
வியாசன் முதல் புகழ்கின்றவர்
மெஸ்ம ரீசக் காந்தப் பார்வையாம்—கிரு
தார்த்த மேல் விழியை நோக்குகின்றவர்.

பாட்டு.

சகாஜீமா பகதூரார் சத்புத்ரர்
தாவ்ஷ்டிக பத்ரர்
தபயோகி சிபார்சாகி
தாரக ஸ்ரீ வெங்க டேஸ்வர சீலன்
தண்டமிழ் யூகி (புண)

இராகம்—மோகனம் தாளம்—ஆதி.

இதையல்லால்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

நீராற்று லிங்கத் தையன்
நேரரிகர குமரன் மெய்யன் (நீ)

ஷை

சீராற்றலாம் புகழ் சொல்ல
திகழ் சம்ப்ரம சேவடி நல்ல (நீ)

ஷை

சோலைக் கருமலை யடிவாரன்
சூழ் பந்திகள் தோத்ர தர்பாரன்
நூலைக் கருதிய க்ஷேமந் தரு
நோயற்ற வாழ்வருளுந் திரு (நீ)

ஷை

முன்னேடி தெய்வம் ரெண்டு
மூர்த்திக் கையனர் மோகனங் கொண்டு
பொன் னேட்டக் காரன் சோதரன்
சின்னேட்டக் காரன் ஆதரன் (நீ)

௸

ராஜபாளைய நகராகி
நமஸ்கார கணபதி யோகி
தேஜஸ் வித்வ சிஷ்யப்ர சாரன்
ஸ்ரீ வெங்கடேஸ்வரன் செந்தமிழாரன் (நீ)

இராகம்—சக்ரவாழம் தாளம்—ஆதி.

பல்லவி.

தேவாமிர்தா புனுவின்
தேச ஸ்வாமி மங்களம்.

௸

ஜீவார்த்த வாசி யோகம்
செய்த நன்மை யுய்த பாகம் (தே)

௸

திண்டுக்கல்லி லடக்க வஸ்ய
தேமி வோத சாமி சிஷ்ய (தே)

௸

சகல கிர்தி தகு நீடூழி
தர வெங்கடேஸ்வரன் வாழி. (தே)

ஜெயராமபிரஸ், இராஜபாளையம்.